# மறுப்பு அறிவிப்பு

03.10.2017 நாளிட்ட ஒரு தமிழ் நாளிதழில் பாரதியார் பல்கலைக்கழகம் நடத்தும் தொலைநிலைக் கல்வி முறையைப் பற்றி உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளிவந்துள்ளது.

1991-ஆம் ஆண்டு முதல் பாரதியார் பல்கலைக்கழகம் தொலைநிலைக் கல்வியினை மிகச் சிறப்பானதாகவும், தரமானதாகவும் பல்கலைக்கழக மானியக் குழு, தமிழக அரசு மற்றும் பாரதியார் பல்கலைக்கழக விதிமுறைகளுக்குட்பட்டும் நடத்தி வருகிறது.

மேலும், பல்கலைக்கழக மானியக் குழுவைச் சார்ந்த DEC (Distance Education Council) மற்றும் DEB (Distance Education Bureau) ஆகிய தொலைநிலைக் கல்வியினை நெறிமுறைப்படுத்தும் அமைப்புகள் பாரதியார் பல்கலைக்கழகத் தொலைமுறைக் கல்விகூடக் கல்வி மையங்கள் மூலமாக நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் மாணவர்களைச் சேர்க்க அனுமதி வழங்கியுள்ளன. பாரதியார் பல்கலைக்கழகச் சட்ட விதிமுறைகளின் படி (Act & Statues) பாரதியார் பல்கலைக்கழக மையங்களை நாட்டின் எந்தப் பகுதியிலும் இயக்க/ துவக்க அனுமதிக்கலாம் என்று 1982-ஆம் ஆண்டிலேயே நெறிமுறை வகுக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு, நெறிமுறைக்குட்பட்டு துவங்கப்பட்ட தொலைமுறைக்கல்வி மையங்கள், இயங்குவதற்கு 2014-15 வரை பல்கலைக்கழக மானியக் குழுவைச்சார்ந்த DEC மற்றும் DEB அமைப்புகள் அனுமதி வழங்கியுள்ளன., பாரதியார் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித்

தரத்தை மேம்படுத்த DEC அமைப்பு, முறையே 2011-ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம், 2012-இல் ரூ.40 இலட்சம், 2014-இல் ரூ.48 இலட்சம் என நிதியுதவியை வழங்கி உள்ளது. 2015 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வியைக் கணினித் தொழில்நுட்பம் சார்ந்த வசதிகளுடன் மேம்படுத்த ரூ.2.5 கோடி வழங்குமாறு DEC அமைப்பிற்குப் பல்கலைக்கழகம் விண்ணப்பித்துள்ளது.

DEB வகுத்த பாடத்திட்ட நெறிமுறைகளின்படித் தயாரிக்கப்பட்ட தொலைநிலைக்கல்வி மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அவ்வமைப்பு அங்கீகரித்துள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழு 2014-15-இல், இந்தத் தொலைநிலைக்கல்வி மையங்களுக்குத் தடை விதித்த பொழுது பாரதியார் பல்கலைக்கழகம், நவம்பர் 2015-இல் அதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றுள்ளது. இந்தத் தடையாணை பல்கலைக்கழக மானியக் குழுவால் இன்று வரை நீக்கப்படவில்லை.

இதனிடையே, பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சில சுயநிதிக் கல்லூரிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில், தொலைநிலைக்கல்வி மையங்களுக்கு எதிராக ஒரு வழக்கினைத் தொடர்ந்தது. அவ்வழக்கும் இதுவரை நிலுவையில் உள்ளது.

தமிழக அரசு 2017 ஜீலையில் தமிழகத்தைச் சார்ந்த துணைவேந்தர்களுக்கான மாநாட்டை நடத்தியது. அப்போது

தொலைநிலைக் கல்வி மையங்களை மாநில எல்லைக்குள் மட்டுமே நடத்த அனுமதிப்பது என்றும் வெளிமாநில மையங்களில் இந்தக் கல்வியாண்டு (2018-19) முதல் மாணவர் சேர்க்கையை அனுமதிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டது. அதன்படி பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் வெளியே உள்ள அனைத்து மையங்களுக்கும், மாணவர் சேர்க்கையை உடனடியாக நிறுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், நாளிதழில் வெளி வந்துள்ள தனி நபர்களின் கூற்றின்படி, பல்கலைக்கழக மானியக் குழுவின் கருத்தை மீறியோ பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டோ, தமிழக அரசின் ஆணையை மீறியோ தொலைநிலைக்கல்வி மையங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

தொலைநிலைக்கல்வி மையங்களில் நடைபெறும் பல்கலைக்கழகத் தேர்வுகள் மிகவும் முறையாகவும் செம்மையாகவும் நடைபெற்று வருகின்றன.

தேர்வுக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு அனைத்து மையங்களிலும் முறையாகத் தேர்வுகள் நடைபெறும் வண்ணம் பல்கலைக்கழகம் செயலாற்றி வருகின்றது. தேர்வு விடைத்தாள்கள் திருத்தும் பணி பல்கலைக்கழக வளாகத்திலேயே நடைபெறுகிறது. தேர்வு விடைத்தாள் திருத்தும் பணிக்குப் பல கல்லூரிகள் தங்களுடைய ஆசிரியர்களை வேலை நேரங்களில் அனுமதிக்க மறுப்பதால், மாலை 2 மணியிலிருந்து இரவு 8 மணி வரை ஆசிரியர்களை அழைத்து விடைத்தாள் திருத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வமயம்

சம்பந்தப்பட்ட பணியினை மேற்பார்வை செய்து தவறுகள் நேரா வண்ணம் கண்காணிக்கப்படுகிறது. தேர்வு முடிவுகள் அனைத்தும் அதற்கான தேர்வு முடிவு ஒப்புதல் குழுவில் (Result Passing Board) சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, துணைவேந்தர் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

இத்தகைய நடைமுறையினைப் பின்பற்றுவதால், எவ்விதத் தவறுகளும் நடைபெற வாய்ப்பில்லை.

ஒரு குறிப்பிட்ட நாளிதழில் **"தொலைதூர கல்வி மையங்கள் தரும் பட்டம் செல்லாது"** என்று பிரசுரிக்கப்பட்ட தகவல் தவறான செய்தியாகும்.

மாணவர்களுடைய பட்டங்கள் எவ்விதக் காரணங்களாலும் நிராகரிக்கப்படமாட்டாது என்று பாரதியார் பல்கலைக்கழகம் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றது. தொலைநிலைக்கல்வியின் மூலம் ஏழை எளிய மாணாக்கரும் மற்றும் மலைவாழ் மாணாக்கரும் குறைந்த கட்டணத்தில் தரமான கல்வியைப் பெற்று வரும் சூழ்நிலையில், இது போன்ற அவதூறான தவறான செய்திகளை வெளியிட்டு மாணவர்களையும் பெற்றோர்களையும் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டாம் என்று பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், இதுபோன்ற தவறான செய்தியை வெளியிட்ட நாளிதழையும் அதற்கு உறுதுணையாக இருந்தவர்களையும் இப்பல்கலைக்கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

******

Public Relations Officer
Bharathiar University,
Coimbatore-46